**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU. J.VIJAYAKUMAR ROUGH STONE QUARRY, LEASE OVER AN EXTENT OF 2.00.0 HA, S.F.NO.220/1 (PART – 4) GOPANAPALLI VILLAGE, HOSUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 04.05.2023 AT 12.00 PM AT M/S.CMK KALYANA MANDAPAM, NAGONDAPALLI, DENKANIKOTTAI MAIN ROAD, HOSUR – 635 109.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt. R. Saranya, I.A.S., | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 3 | Er. R.Ranga Raj | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 4 | Er. P.Krishnan | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 5 | Thiru. J. Vijaya Kumar | : | The Proponent<br>Thiru. J.Vijayakumar Rough Stone Quarry |
| 6 | Thiru.M.VijayaPrabhu | : | EIA Consultant,<br>M/s. GEO Technical and Mining Solutions,<br>Dharmapuri. |
| | Public | : | 66 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil `Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and

project proponent who have attended the public hearing for the proposed Thiru. J.Vijayakumar Rough Stone Quarry Lease over an Extent of 2.00.0 Ha.S.F.No.220/1 (Part – 4) Gopanapalli Village, Hosur Taluk, Krishnagiri District Is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 01.04.2023 and bit notices regarding public hearing was issued to the public of Gopanapalli Village, Kulichandram Village, Devaganapalli Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to express their views and comments about the proposed rough stone quarry project.

Thereafter, Thiru.M.VijayaPrabhu, EIA Consultant, M/s. GEO Technical and Mining Solutions, Dharmapuri of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Raja, Gopanapalli Village:**

Thiru. Raja has welcomed the proposed quarry project. He said that, the local people are migrating to cities like Hosur and Bangalore for employment. Therefore, he requested that the local people should be given priority in the employment of the proposed quarry project. Further, he requested to utilize water sprinklers to control the dust emanation from the quarry.

2. **Thiru. Madhesh, Gopanapalli Village:**

Thiru. Madesh has said that, they do not have any objection to the proposed quarry project and welcome the project. He also requested to control the dust emanation by proper utilization of water sprinklers on the both sides of the quarry link road.

3. **Thiru. Paapaya Gowdu, Kulichandram Village:**

Thiru. Paapaya Gowdu has asked the quarry management to plant saplings around the proposed quarry to create green belt for control the dust emanating from the quarry. He also said that, he has no objection to the proposed quarry project.

**District Environmental Engineer, TNPCB, Hosur:**

District Environmental Engineer, TNPCB, Hosur has the quarry management to explain about the air pollution control measures that can be used to control dust emanation and the sapling species used to develop green belt around the quarry.

**Reply:**

Environmental Impact Assessment Consultant for the proposed M/s. M. Vijayakumar Rough Stone Quarry, Mr. M. Vijaya Prabhu, Director, GEO Technical & Mining Solutions, Dharmapuri has said that all air pollution control devices will be used in the proposed quarry project to control air pollution factors like $PM_{10}$, $PM_{2.5}$, $NO_X$, $SO_2$. He also assured that, they will operate the quarry by adhere the norms and guidelines laid down by the Tamil Nadu Pollution Control Board to control air pollution. Further, he said that, they are planning to plant 1800 saplings like

Pungam and Neem around the quarry and maintain the same.

**4. Thiru. Narayana Reddy, Gopanapalli Village:**

Thiru. Narayana Reddy has asked the quarry management to plant saplings around the proposed quarry to develop green belt for control the dust generating from the quarry. He also asked to use more water sprinklers to control the dust emanation from the quarry. He also asked the quarry management to provide community assistance such as providing gravel stones at low cost to the local people and providing financial assistance to temples.

**5. Thiru. Roobesh, Gopanapalli Village:**

Thiru. Roobesh has requested that, the proposed quarry management should provide employment to the youngsters with above eighteen years of age living in the Panchatsipuram, Koolichandram and Sevakanapalli villages.

**6. Thiru. Shanker, Kulichandram Village:**

Thiru. Shankar has requested that, the quarry management to help renovate the lake and pond in the locality. The rules laid down by the government should be properly followed to control the air pollution caused by the dust emanating from the quarries. Also, while carry out the blasting in the quarries, he asked to strictly follow the regulations laid down by the government. Further, he said that, they have no objection to the proposed quarry project as it is far away from the locality.

**District Environmental Engineer, TNPCB, Hosur:**

District Environmental Engineer, Hosur, told the villagers of Gopanapally that, those who support / oppose the proposed quarry project can raise their hands and show their support / oppose. For that, a large number of local people raised their hands and registered their support.

15

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 6 number of petitions were received on the proposed M/s. Thiru. J.Vijayakumar Rough Stone Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation & E-mail representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

15/3/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

15/5/23

**Sub Collector**
**Hosur**

5/7

**District Collector**
**Krishnagiri**

5/7

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 6 number of petitions were received on the proposed M/s. Thiru. J.Vijayakumar Rough Stone Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation & E-mail representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

15/5/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

15/5/23

**Sub Collector**
**Hosur**

5/7

**District Collector**
**Krishnagiri**

5/7

**கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், கோபனபள்ளி கிராமத்தில், சர்வே. எண்.220/1 (பகுதி 4), உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். J. விஜயகுமார் ரப் ஸ்டோன் குவாரி 2.00.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 04.05.2023 அன்று தேன்கனிக்கோட்டை மெயின் ரோடு, நாகொண்டபள்ளி, ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தி/ள். CMK கல்யாண மண்டபத்தில் முற்பகல் 12.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R. சரண்யா, I.A.S., | : | சார் ஆட்சியர், ஓசூர்,<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er. R. இரங்கராஜ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | Er.P.கிருஷ்ணன் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 5 | திரு. J. விஜயகுமார் | : | உரிமையாளர்<br>தி/ள். J. விஜயகுமார் ரப் ஸ்டோன் குவாரி |
| 6 | திரு. M. விஜயா பிரபு | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள்.ஜீயோ டெக்னிக்கல் & மைனிங் சொளியுசன்ஸ், தர்மபுரி. |
| | பொதுமக்கள் | : | 66 எண்ணிக்கை (வருகை<br>பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். J. விஜயகுமார் ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் தி/ள். J. விஜயகுமார் ரப் ஸ்டோன்

குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 01.04.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், கோபனப்பள்ளி, கூலிசந்திரம், தேவகானப்பள்ளி ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் ஒளி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள். J. விஜயகுமார் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். J. விஜயகுமார் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. M. விஜயா பிரபு, தி/ள்.ஜியோ டெக்னிக்கல் & மைனிங்

5

சொளியுசன்ஸ், தர்மபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. ராஜா, கோபாணப்பள்ளி கிராமம்:**

திரு. ராஜா அவர்கள், உத்தேசிக்கப்பட்ட குவாரி திட்டத்தை தான் வரவேற்பதாக தெரிவித்தார். உள்ளூரில் உள்ள மக்கள் வேலைவாய்ப்பிற்காக ஓசூர் மற்றும் பெங்களூர் போன்ற நகரங்களுக்கு செல்கின்றனர். எனவே, உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்தின் வேலைவாய்ப்புகளில் உள்ளூரில் உள்ள மக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். மேலும், குவாரியிலிருந்து அதிகளவில் தூசிகள் எழும்பா வண்ணம் தண்ணீர் தெளிப்பான்களை பயன்படுத்தி தூசினை கட்டுப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

**2. திரு. மாதேஷ், கோபாணப்பள்ளி கிராமம்:**

திரு. மாதேஷ் அவர்கள், உத்தேசிக்கப்பட்ட குவாரி திட்டம் வருவதற்கு தங்களுக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை எனவும் இத்திட்டத்தை வரவேற்பதாக

தெரிவித்தார். மேலும், குவாரியை இணைக்கும் இணைப்பு சாலையில் தூசி வராமல் தண்ணீர் தெளிப்பான்களை முறையாக பயன்படுத்தி தூசினை கட்டுப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

**3. திரு. பாப்பையா கவுடு, கூலிசந்திரம்:**

திரு. பாப்பையா கவுடு அவர்கள் உத்தேசிக்கப்பட்ட இக்குவாரியை சுற்றிலும் மரக்கன்றுகளை நட்டு, பசுமை வளாகத்தினை ஏற்படுத்தி, குவாரியிலிருந்து உருவாகும் தூசியினை கட்டுப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். மேலும், உத்தேசிக்கப்பட்ட இக்குவாரி திட்டம் அமைவதற்கு தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர்:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் அவர்கள், இக்குவாரி நிர்வாகத்தினிரிடம், காற்று மாசு தடுப்பன்கள் குறித்து விளக்குமாறும், குவாரியை சுற்றி பசுமை வளாகத்தினை உருவாக்க பயன்படுத்தப்படும் மரக்கன்று வகைகளை பற்றி விளக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**பதில்:**

உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். J. விஜயகுமார் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. M. விஜயா பிரபு, தி/ள்.ஜீயோ டெக்னிக்கல் & மைனிங் சொளியுசன்ஸ், தர்மபுரி அவர்கள், $PM_{10}$, $PM_{2.5}$, $NO_X$, $SO_2$ போன்ற காற்று மாசு காரணிகளை கட்டுப்படுத்தும் விதமாக அனைத்து காற்று மாசு தடுப்பான்களும் இக்குவாரி திட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்தார். மேலும், தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி காற்று மாசு ஏற்படா வண்ணம் குவாரியை இயக்குவோம் என உறுதி அளித்தார். புங்கம், வேப்பம் போன்ற மரக்கன்று

வகைகளை நட்டு பராமரிக்க உள்ளதாகவும், சுமார் 1800 மரக்கன்றுகளை குவாரியை சுற்றிலும் நட உத்தேசித்துள்ளதாக தெரிவித்தார்.

**4. திரு. நாராயான ரெட்டி, கோபானப்பள்ளி:**

திரு. நாராயான ரெட்டி அவர்கள் உத்தேசிக்கப்பட்ட இக்குவாரியை சுற்றிலும் மரக்கன்றுகளை நட்டு, பசுமை வளாகத்தினை ஏற்படுத்தி, குவாரியிலிருந்து உருவாகும் தூசியினை கட்டுப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். மேலும், குவாரியிலிருந்து அதிகளவில் தூசிகள் எழும்பா வண்ணம் தண்ணீர் தெளிப்பான்களை பயன்படுத்தி தூசினை கட்டுப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். மேலும், குவாரி நிர்வாகத்தினரை உள்ளூர் மக்களுக்கு குறைந்த விலையில் ஜல்லி கற்களை வழங்குதல் மற்றும் கோயில்களுக்கு நிதி உதவி அளித்தல் போன்ற சமுதாய உதவிகளை செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

**5. திரு. ரூபேஷ், கோபானப்பள்ளி:**

திரு. ரூபேஷ் அவர்கள் உத்தேசிக்கப்பட்ட இக்குவாரியில் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட பஞ்சாட்சிபுரம், கூலிசந்திரம், செவ்வகானப்பள்ளி கிராமங்களில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

**6. திரு. சங்கர், கூலிசந்திரம்:**

திரு. சங்கர் அவர்கள் உள்ளூரில் அமைந்துள்ள ஆறு, குளம் ஆகியவற்றை தூர் வாரி, மேம்படுத்துவதற்கு உதவுமாறு இக்குவாரி நிர்வாகத்தினரிடம் கேட்டுக்கொண்டார். அரசு வகுத்துள்ள விதிமுறைகளை முறையாக பின்பற்றி குவாரிகளில் இருந்து தூசினால் எற்படும் காற்று மாசினை கட்டுபடுத்த வேண்டுமென்றும். மேலும், குவாரிகளில் வெடி வைக்கும்பொழுது, அரசு வகுத்துள்ள விதிமுறைகளை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுட்கொண்டார். உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டமானது

உள்ளூரிலிருந்து தொலைவில் அமைந்துள்ளதால் இத்திட்டத்திற்கு தங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லையென தெரிவித்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர்:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் அவர்கள், கோபானப்பள்ளி கிராம மக்களிடம், இக்குவாரி திட்டத்திற்கு ஆதரவு அளிப்பவர்கள், தங்களது கைகளை உயர்த்தி ஆதரவு அளிக்கலாம் என்று தெரிவித்தார். அதற்கு, பெருமளவில் அவ்வூர் பொதுமக்கள் கைகளை உயர்த்தி தங்களது ஆதரவினை பதிவு செய்தனர்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். J. விஜயகுமார் ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 6 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். J. விஜயகுமார் ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு

மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

15/5/2023

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**

**சார் ஆட்சியர்**
**ஓசூர்**
4/7

20/5
**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**
4/7